# நோயும் மருந்தும்

1. நீலகேசி – குறிப்பு வரைக.

- நீலகேசி ஐஞ்சிறுங்காப்பியங்களுள் ஒன்று.
- இந்நூல் சமணசமயக் கருத்துகளை வாதங்களின் அடிப்படையில் விளக்குகிறது.
- கடவுள் வாழ்த்து நீங்கலாகப் பத்துச் சருக்கங்களைக் கொண்டது.
- சமயத் தத்துவங்களை விவாதிக்கும் தருக்க நூலான இதன் ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை.

2. ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுங்காப்பியங்கள் ஆகியவற்றின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.

ஐம்பெருங்காப்பியங்கள் :

- சிலப்பதிகாரம்
- மணிமேகலை
- சீவக சிந்தாமணி
- வளையாபதி
- குண்டலகேசி

ஐஞ்சிறுங்காப்பியங்கள் :

- உதயணகுமார காவியம்
- நாககுமார காவியம்
- யசோதர காவியம்
- சூளாமணி
- நீலகேசி

3. நோயின் வகைகள், அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை?

நோயின் வகைகள் :

- மருந்தினால் நீங்கும் நோய்கள்.
- எதனாலும் தீராத தன்மையுடைய நோய்கள்.
- அடங்கி இருப்பனபோல வெளித்தோற்றத்தில் தெரிந்தாலும்

முற்றிலும் தீராமல் உள்ளுக்குள் இருந்து துன்பம் தருவன.

தீர்க்கும் வழிகள் :

- நீலகேசியில் பிறவித்துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன நல்லறிவு, நற்காட்சி, நல்லொழுக்கம் ஆகியனவாகும்.